# ஒரு நாள்

கி.பி.2071–ஆம் ஆண்டு, பதினொன்றாம் மாதத்தில் ஒரு நாள். ஸிசியம் நேரம் 17 : 26. அந்த அறையின் மத்தியில் ஆத்மா சலனமில்லாமல் படுத்திருந்தான். அவன் கண்கள் மூடியிருந்தன. நேராக விட்டத்தை நோக்கி அண்ணாந்து விறைப்பான சயனம். அந்த அறை மிகச் சுத்தமாக இருந்தது. சுவரில் ஒரே ஓர் இடத்தில் மட்டும் உயரத்தில் 17 : 26 : 30; 17 : 26 : 31; 17 : 26 : 32 என்ற எண்கள், கரைந்து கொண்டிருக்கும் காலத்தை அறிவித்துக்கொண்டிருந்தன. உறுத்தாமல், இதமாக, ஒரு 'டிங்டாங்' கேட்டது. அதன் பின் "ஆத்மா எழுந்திரு" என்று ஒரு வற்புறுத்தல் ஒலித்தது.

ஆத்மா உடனே எழுந்தான். "என்ன?" என்றான்.

"உன் மனைவியும், மனைவியின் தம்பியும், மாமனாரும் தலைத் தீபாவளிக்கு வந்துவிட்டார்கள்."

"நல்லது. உடனே அவர்களை அனுப்பு."

"அவர்கள் சரியாக 17 : 27 க்கு அங்கு வந்து சேருவார்கள்."

"நல்லது. வந்தனம்."

ஆத்மா தன் கலைந்த தலையை விரல்களால் வாரிக்கொண்டான். அவசரமாகச் சட்டை அணிந்துகொண்டான். எதிரே சுவரைப் பார்த்தான். விநாடிகள் மாற மாற 58, 59...

17 : 27 : 00.

"டிங் டாங்" என்று மற்றொரு அறிவிப்பு இன்னிசை. கதவு பெருமூச்சு இல்லாமல் தானே திறந்துகொண்டது. அவர்கள் மூவரும் நின்றுகொண்டிருந்தார்கள்.

அவருக்கு நடுத்தர வயதுக்கு அடுத்த வயதிருக்கும். முகத்தில் பிரயாணக் களைப்புத் தெரிந்தது. கையில் ஒரு சிறிய தோல் பெட்டி வைத்திருந்தார். மற்றவர்கள் சூஜா பிரம்புக்கூடை, பிளாஸ்க் எல்லாம் வைத்திருக்க, அந்தப் பெண் – ஆத்மாவின் மனைவி – மிகமிக அழகாக இருந்தாள்.

ஆத்மாவின் மாமனார் சற்று அளவு மீறிய புன்னகையுடன், "ஹலோ! மாப்பிள்ளே" என்று கீழே பெட்டியை வைத்துவிட்டு அவன் அருகில் வந்தார்.

"ஹலோ ஸார், எப்படி இருக்கிறீர்கள்? சௌக்கியமா?"

"சௌக்கியத்துக்கு என்ன குறைச்சல்! இந்த மூட்டுவலிதான் போகமாட்டேன் என்கிறது."

"டாக்டரிடம் காண்பித்தீர்களா?"

"டா... க்டர் என்ன சொல்வான்? ஓய்வு எடுத்துக்கொள். பச்சைத் தண்ணீரில் குளிக்காதே. மாறுதலுக்கு வேறு ஊருக்குப் போ...? அவ்வளவுதான். வந்துவிட்டேன்!"

அவர் சொன்னதைக் கவனிக்காமல் ஆத்மா தன் மனைவியைப் பார்த்துக்கொண்டிருந்தான்.



www.writersujatha.com

“ஹலோ, நித்யா?”

“நீங்கள் களைத்திருக்கிறீர்கள்” என்றாள் நித்யா.

“நானும் அப்போதிலிருந்து கவனிக்கிறேன். என்னை ஒருத்தரும் விசாரிக்கவில்லை!” என்றான் பையன்.

“ஓ, மன்னிக்கவும் பாஸ்கர். எவ்வளவு உயரம் வளர்ந்து விட்டாய்!”

“அத்திம்பேர், நான் ராக்கெட் விடுவேன். ராக்கெட் வாங்கி வைத்திருக்கிருக்–கிறீர்களா?”

“ஓ, நிறைய. நித்யா, நான் இளைத்தா இருக்கிறேன்? என்னைச் சரியாகப் பார்... நீதான் நான் சென்ற தடவை உன்னைப் பார்த்ததைவிட...”

“இன்னும் அழகாக இருக்கிறாய்...?” என்று முடித்தான் பாஸ்கர்.

“ஏய், பாஸ்கர்!” என்றாள் நித்யா.

“பையன் வயசுக்கு மிஞ்சிப் பேசுபவன். கடைசிக் காலத்தில் பிறந்த தப்பு. ஏகப்பட்ட செல்லம். மாப்பிள்ளை, எப்படி இருக்கிறது ஆபீஸ் எல்லாம்?”

“ஆபீசுக்கு என்ன? ஓடிக்கொண்டுதான் இருக்கிறது.”

நித்யா, “அந்த செக்ரட்ரி இருக்கிறாளா இன்னும்..?” என்று கேட்டாள்.

“யார்?”

“யார்! பாசாங்கைப் பார்.”

“காப்பி தயாரித்திருக்கிறேன்... கொண்டுவரட்டுமா?”

“சர்க்கரை இல்லாமல்” என்றார் மாமனார்.

“நித்யா உட்காரேன்.”

“மாப்பிள்ளை! நீங்கள் பேசிக்கொண்டு இருங்கள். நான் குளியல் அறை போக வேண்டும். குளியல் அறை எங்கே இருக்கிறது?”

“இடது பக்கத்தில்...”

“பாஸ்கர்! நீ வீட்டைச் சுற்றிப் பாரேன். எவ்வளவு பெரிய வீடு பார்.”

“என்னையும் கழற்றிவிடப் பார்க்கிறீர்களா, அத்திம்பேர்! என் ‘ரேட்’ தெரியுமல்லவா, உங்களுக்கு?”

“அவன் காசு கேட்டால் கொடுக்காதீர்கள்.”

“வாயை மூடு நித்யா! அது எனக்கும் அத்திம்பேருக்குமான விவகாரம்.”

ஆத்மா சிரித்துக்கொண்டு புதுக்காசுகளை அவன் பையில் திணித்தான்.



www.writersujatha.com

அவர்கள் தனியாக இருந்தார்கள்.

“நித்யா! நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய்? நான் உன்னைத் தொட்டுப் பார்க்க வேண்டும்.”

ஆத்மா அவளைத் தொட்டான். “எத்தனை நாள்?” என்றான்.

“என்ன எத்தனை நாள்?”

“நாம் தொட்டுக்கொண்டு.”

நித்யாவின் உடல் அமைப்பில் சமீபக் கல்யாணத்தின் பூரிப்பும் இன்னும் மிச்சம் இருக்கும் கன்னிமையும் தெரிந்தன. அவள் நெற்றியில் கூந்தல் வருடியது. அவள் உதடுகள் செதுக்கினாற் போல் அவ்வளவு கச்சிதமாக இருந்தன. அவள் கண்களில் இலேசாக வெட்கம் பூசப்பட்டிருந்தது.

“ம்ஹூம்!” என்றாள்.

“ஏன்?” என்றான்.

“அப்பா வந்துவிடுவார்!”

‘க்கும்!’ என்று கனைத்துக்கொண்டே வந்தார், பெரியவர் முகத்தைத் துண்டால் துடைத்துக்கொண்டு.

“மாப்பிள்ளை! வந்த சம்பளத்தை எல்லாம் கொஞ்சம் சேர்த்து வைத்திருக்கிறீர்களா, இல்லையா? எப்பொழுது தனிக் குடித்தனம் என்று நித்யா துடிக்கிறாள்.”

“எப்பொழுது?” என்றான் ஆத்மா.

“ஐப்பசி மாதம் கூடாது” என்றார்.

“சாமான்களெல்லாம் வாங்கி வைத்திருக்கிறீர்களா? நான் பட்சணங்கள் செய்ய வேண்டும்...” என்றாள்.

“மாப்பிள்ளை, உங்களுக்கு வேஷ்டி எடுத்திருக்கிறேன். ஒரு டெரிகாட் சட்டை. துணிக் கம்பெனியில் எக்ஸைஸ் வரி இல்லாமல் கொடுத்தான். அப்புறம்...”

“அப்பா, மோதிரத்தைச் சொல்லிவிடாதீர்கள்.”

“மோதிரமா?”

“ஆம். தலை தீபாவளி இல்லையா!”

“எதற்கு ஸார், இதெல்லாம்?”

“அப்படிச் சொல்லிக்கொண்டே போட்டுக்கொள்வார். இவருக்கு மோதிரம், மைனர் சங்கிலி எல்லாம் ஆசை!”

“எல்லாம் என் சக்திக்கு ஏற்பச் செய்திருக்கிறேன். ஏதாவது குறை இருந்தால்...”



www.writersujatha.com

அவர்கள் அவர் சொல்வதைக் கவனியாமல் ஒருவரையருவர் பார்த்துக்கொண்டிருக்க, அவர் ‘க்கும்’ என்று மறுபடியும் கனைத்தார்.

“ஸாரி, என்ன சொல்லிக்கொண்டிருந்தீர்கள்...”

பாஸ்கர் ஓடி வந்தான். “அப்பா! அப்பா! இந்த வீட்டில் எல்லாம் இருக்கிறது! பட்டாசுகள் கொளுத்த பின்பக்கத்தில் தனியாக இடம் இருக்கிறது. வெளுத்து வாங்கலாம். ஆனால் பட்டாசுதான் இல்லை.”

“பட்டாசு நிறைய வாங்கிவைத்திருக்கிறேன், பாஸ்கர்!”

“எங்கே? எங்கே?”

“தராதீர்கள். இப்பொழுதே எல்லாவற்றையும் தீர்த்து விடுவான்.”

“நித்யா, நான் உன்னைத் தனியாகக் கவனிக்கிறேன். நீ செய்ததை அத்திம்பேரிடம் சொல்லட்டுமா?”

“பாஸ்கர்!”

“என்ன செய்தாள்?”

“தனியாகச் சொல்கிறேன். அதற்கு உண்டான காசை இரண்டு பேரிடமும் சேகரிக்க வேண்டும்!”

“நான் உள்ளே போகிறேன்” என்றாள் நித்யா.

“இரு. உங்களுக்காக நான் துணி வாங்கிவைத்திருக்கிறேன், பார்க்க வேண்டாமா? நித்யா உனக்கு மஜெந்தா பிடிக்கும் என்கிறாயே, உனக்கு மஜெந்தாவில் பட்டுப் புடவை, பெரியவருக்கு வேஷ்டி, பாஸ்கருக்கு ஷர்ட், பட்டாசு!”

“உங்களுக்கு?”

“கதர் வேஷ்டி.”

“அத்திம்பேர், பட்டாசு எங்கே?”

“காட்டுகிறேன். நீ நித்யா என்ன செய்தாள் என்று சொல்.”

“சொல்லட்டுமா?” என்று பாஸ்கர் நித்யாவைப் பார்த்தான். நித்யா உள்ளே ஓடிவிட்டாள். “சும்மா ப்ளாக்மெய்ல் பண்ணுகிறான். பையன் அதில்தான் கெட்டிக்காரன். கடைசி–வரைச் சொல்லமாட்டான்.”

“அத்திம்பேர், இந்த வெடிக்கு எவ்வளவு கொடுத்தீர்கள்?”

“ஞாபகமில்லை, ஏன்?”

“தண்டம். படத்தில் போட்டபடி ஒன்றும் வெடிக்கமாட்டேன் என்கிறது.”

“பாஸ்கர், ஜாக்கிரதை. வீட்டுக்குள் ஒன்றும் வெடிக்கக்கூடாது.”

“அது வெடி இல்லை அப்பா.”

“நல்லெண்ணெய் வாங்கிவைத்திருக்கிறீர்களா?” என்று உள்ளே இருந்து நித்யாவின் குரல் கேட்டது.

“ஓ எஸ். அலமாரியில் இருக்கிறது, பாட்டிலில்.”

“இந்தப் புடவைக்கு எத்தனை கொடுத்தீர்கள்?”

“ஞாபகமில்லை.”

“சௌகரியம். நான் வந்தவுடன் தினம் செலவழித்த காசுக்குக் கணக்குச் சொல்லவில்லையென்றால் காதைப் பிடித்துத் திருகப் போகிறேன்.”

‘படபட படபட’வென்று வராந்தாவில் வெடி வெடித்தது.

“டேய் ஜாக்கிரதையடா!” என்று அருகில் டப்பா கட்டுக் கட்டிக்கொண்டு பெரியவர் பையனைக் கவலையுடனும் பெருமையுடனும் கண்காணித்தார்.

ஆத்மா அருகில் போய் நின்றான்.

“மாப்பிள்ளை! என் மூட்டு வலிக்கு ஒரு நல்ல டாக்டரிடம் காட்ட வேண்டும்” என்றார்.

“நாளைக்கு விடுமுறை. நாளன்றைக்குக் காட்டலாம்.”

“நாளை மாலை நாங்கள் ஊருக்குப் போகிறோமே?”

“அது முடியாது. பார்க்கலாம்.”

“டேய், டேய்! கிட்டப் போகாதேடா. திரி இன்னும் பிசுபிசு என்கிறது.”

“பயப்படாதே அப்பா.”

ஆத்மா சமையலறைக்கு வந்தான்.

“நித்யா!”

“என்ன என் பின்னாலேயே சுற்றுகிறீர்களே, அப்பா எங்கே?”

“அப்பா பட்டாசு சுடுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்.”

“சின்னக் குழந்தைதான்! எனக்கு நிறையக் காரியம் இருக்கிறது. நீங்கள் சீண்டிக்கொண்டே இருந்தால் எனக்கு ஓடாது. இப்படி நுனி விரலால் தொடாதீர்கள். எனக்குக் குறுகுறு என்கிறது. ப்ளீஸ்! ராத்திரி பேசலாமே?”

“ராத்திரி பேச வேண்டாம்!” என்றான் ஆத்மா. நித்யாவின் நெற்றியில் வியர்த்திருந்தது. “உப்பு எல்லாம் சரியாகப் போட்டிருக்கிறேனோ என்னவோ? அம்மா என்னைச் சமைக்கவே விடமாட்டாள். சுற்றுக் காரியம்தான். சமையல் மறந்துவிட்டது.”

www.writersujatha.com

ஆத்மா நித்யாவின் அருகில் வந்து ஒரு துண்டினால் ஒற்றிவிட்டான். “உன்னிடம் விதம் விதமாக வாசனை அடிக்கிறது. சாம்பார்ப் பொடி வாசனை, பவுடர் வாசனை, உன் வாசனை!”

“உங்களிடம் குறும்பு வாசனை அடிக்கிறது. அவசர வாசனை அடிக்கிறது.”

“நித்யா! நித்யா! நித்யா! எவ்வளவு அழகான, என் தனிப்பட்ட, என் பிரத்தியேக, என் என் என் வார்த்தை! என் பேர் என்ன சொல்?”

“ஆத்மா.”

“நான் யார்?”

“என் கணவர்.”

“இல்லை, காதலன்.”

“கணவன், காதலன். என் நெற்றிப் பொட்டை எல்லாம் கலைத்து விட்டீர்கள். கதவு திறந்திருக்கிறது.”

“உன் அப்பா வரமாட்டார். வந்தாலும் ‘க்கும்’ என்று கனைத்துக் கொண்டுதான் வருவார்.”

‘க்கும்’ என்று சத்தம் கேட்டது.

ஆத்மா விலகினான்.

“என்னம்மா, என்ன சமையல்?”

“ஏதோ செய்திருக்கிறேன் அப்பா!”

“உப்பு அதிகம் போடுவாள். பாஸ்கர்! சாப்பிட வா. மாப்பிள்ளை, உங்கள் அப்பாவுக்குச் சற்று உங்களிடம் கோபம்.”

“ஏன்?”

“தீபாவளிக்கு வரும்படி கடிதம் எழுதக்கூடாதா?”

“எழுதினால் வந்துவிடுவாரா?”

“வருகிறாரோ இல்லையோ, எழுத வேண்டியது உங்கள் கடமை.”

இரவு. கண்ணாடி ஜன்னலுக்கு வெளியே வாணங்கள் வெடித்தன. வானத்தில் தீச்சரங்கள் எரிந்து பளிச் பளிச்சென்று மின்னிவிட்டு, சற்று நேரம் கழித்து, பஞ்சில் ஒத்தினது போல் வெடிகள் கேட்டன. நித்யாவுக்காக ஆத்மா காத்திருந்தான். அவள் வேண்டுமென்றே பாத்திரங்கள் ஒன்றுவிடாமல் தேய்த்துக் கழுவி, பால் காய்ச்சித் தாமதம் செய்தாள். கடைசியில் அவள் அந்த மெல்லிய இருட்டில் மெல்ல வந்து அவன் அருகில் அமர்ந்தபோது அவ்வப்போது ஜன்னலுக்கு வெளியே ஏற்படும் வெளிச்சத்தில் அவள் முகமும் உடலும் அவனுக்கு விதம் விதமாய்ப் பிரத்தியட்சமாகும்போது, அவள் மௌனமாகவே இருந்தாள். முதலில் பாசாங்கு, அப்புறம் விருப்பம், அப்புறம் ஆனந்தம்.



www.writersujatha.com

இரவு முழுவதும்... இரவு முழுதுமே இருக்கிறது. நித்யா விழித்துக்கொள். தூங்காதே. அவள் அரைத் தூக்கத்தில் முனகிவிட்டுப் பின் முழுவதும் விழித்து... என் அரசனே என்றாள்.

காலை எழுந்து, பலகைகளில் கோலம் போட்டு, அவனை உட்கார வைத்து, எண்ணெய் வைத்து நீராட்டிச் சீயக்காயால் கண்ணீர் சிந்த வைத்து, தின்பண்டங்கள் தந்து, பட்டாசு கொளுத்தப் பயந்து, புதுப்புடவை சரசரத்து, மத்தாப்பு போலச் சிரித்து அவனுடன் உராய்ந்து தீபாவளி மலர் பார்த்து...

www.writersujatha.com

அந்தக் கணங்கள் மிக அழகாக, சீராக அமைக்கப்பட்டிருந்தன. ஆனந்தத்தில் தோய்த்தெடுத்த கணங்கள் – மாமனார் பார்வையை ஏமாற்றித் தொட்டுக்கொண்ட கணங்கள். பார்த்துக்கொண்ட திருட்டுப் பார்வைகள். சொன்ன நேற்றிரவு ஞாபகங்கள். உதட்டின் கோடியில் மலர்ந்த அர்த்தம் புரிந்த புன்னகைகள் – தாலியில் மஞ்சள், நெற்றியில் குங்குமம், வேஷ்டிக் கரையில் ஜரிகை, பட்டாசில் சீன அழகிகள், தின்பண்டங்களில் புதைந்த திராட்சைகள்.

அவள் என் மனைவி... என் மனைவி!

பிற்பகல் அவனை வருந்தி வருந்திச் சாப்பிட வைத்து வெற்றிலை மடித்துக்கொடுத்துத் தனியாகக் கிடைத்த சந்தர்ப்பத்தில் நித்யா அவனைக் கேட்டாள்:

“என்னை எப்பொழுது அழைத்துக்கொள்ளப்போகிறீர்கள்?”

“இன்றே, இப்பொழுதே!”

“விளையாடாதீர்கள். இந்த மாதம் வரக்கூடாது. கல்யாணமாகி ஆறு மாதமாகிவிட்டது. ஒரே ஊரில் அப்பா வீடும் மாமனார் வீடும் இருப்பது கொடுமை. உங்கள் அம்மா ரொம்ப நல்லவர்கள். ஆனால் நான் படித்தவள் என்பதைச் சில வேளைகளில் மறந்து விடுகிறார். நானோ அடுத்த தெருவில் இருக்கும் அம்மா வீடு போக முடியாது. கோவிலில்தான் பார்த்துக்கொள்ள வேண்டும். நீங்களோ கடுதாசிப் பிரியர். ‘ஆக்ஷன்’ இல்லை. லீவு கிடைக்காது. தலை தீபாவளிக்கு மாப்பிள்ளை மாமனார் வீட்டுக்கு வருவார். இங்கே தலைகீழ். நாங்கள் உங்களைத் தேடி வருகிறோம். அடுத்த மாதம், அடுத்த மாதம் என்று எத்தனை தடவை தள்ளிப்போட்டு விட்டீர்கள்! நான் என்ன பிஸ்கட்டா? ஏன் கடிக்கிறீர்கள்..?”

“நித்யா! இந்தத் தடவை பஞ்சாங்கத்தையெல்லாம் உதறிப் போட்டுவிட்டு உன்னைத் திடீர் என்று எனக்கு லீவு கிடைத்த மறுநாள் வந்து அப்படியே பிருத்விராஜ் மாதிரிக் கொண்டுபோகப் போகிறேன்.”

“பேசுவீர்கள் அவ்வளவுதான்... நீங்கள் சற்றுத் தூங்குங்கள். காப்பி போட்டதும் எழுப்புகிறேன். எனக்கு உள்ளே காரியம் இருக்கிறது...”

பிற்பகல் நன்றாகத் தூங்கிவிட்டு ஆத்மா எழுந்தபோது மெல்லியதாக இருள் படர்ந்திருந்தது.

“நித்யா, காப்பி!” என்றான்.

“நித்யா!”

“நித்யா!”

“ஸார்! பாஸ்கர்?” விருட்டென்று எழுந்தான். “நித்யா” என்றான். அறை காலியாக எதிரொலித்தது.

“எங்கே அவர்கள்?” அறை அறையாகத் தேடினான். நித்யா இல்லை. மாமனார் இல்லை. எங்கே போனார்கள்? வராந்தாவில் நிற்கிறார்களா? அவசரம் அவசரமாக வராந்தாக் கதவை உதைத்துத் திறந்தான். அங்கேயும் இல்லை.

உள்ளே வந்து நின்றான். “நித்யா!” என்றான் உரக்க. நகத்தைக் கடித்தான்.

“யாரைத் தேடுகிறாய்?” என்ற குரல் அந்த அறையில் படர்ந்தது.

“அவர்கள் எங்கே? என் மனைவி நித்யா எங்கே?”

“அவர்கள் இல்லை.”

“இல்லை என்றால்?”

“அவர்கள் அவ்வளவுதான்.”

“என்ன விளையாடுகிறாய்? என் மனைவி எங்கே? எனக்குக் காட்ட வேண்டும். அவளுடன் நிறையப் பேச வேண்டும்.”

“அவர்கள் இனிப் பேசமாட்டார்கள்.”

“ஏன்?”

“ஆத்மா, நீ யார்?”

“நான் ஒரு பிரஜை.”

“உன் வேலை என்ன?”

“கம்ப்யூட்டர் காட்டில் ஓர் இன்ஜினீயர்.”

“உன் அப்பா யார்? உன் அம்மா யார்?”

“தெரியாது, தெரியாது.”

“கிடையாது. அதுதான் பதில். உனக்கு மனைவி கிடையாது, சுற்றம் கிடையாது. நீ ஒரு பிரஜை, அவ்வளவுதான். ஒரு ரசாயனச் சேர்க்கை – அவ்வளவுதான் நீ!”

“அவர்கள் எல்லாம் எவ்வளவு நிஜமாக இருந்தார்கள்...!”

“நீதான் அவர்களை வரவழைத்தாய். ஞாபகம் இருக்கிறதா? சென்ற நூற்றாண்டுப் புத்தகங்களை ஆராய்ந்தாய். எனக்கு விடுமுறைக்கு, சென்ற நூற்றாண்டுப் பாணியில், ஒரு தலை தீபாவளி வேண்டும் என்று கேளிக்கை ஸ்தாபனத்துக்கு அறிவித்தாய். ஞாபகங்கள் வேண்டும் என்றாய். ஒரு மனைவி வேண்டும், ஒரு மாமனார் வேண்டும், அவருக்கு மூட்டுவலி வேண்டும், ஒரு பையன் வேண்டும், குறும்பு வேண்டும்... இந்த யுகத்தை ஒரு தினம் மறந்திருக்க வேண்டும் என்றாய். ஞாபகம் இருக்கிறதா?”

“ஆம். அப்பொழுது அவர்கள் எல்லாம்...”

“உன் மனத்தில், உன் சூழ்நிலையில் உண்டாக்கப்பட்ட பிம்பங்கள். விஞ்ஞான சாகசத்தால் அமைக்கப்பட்ட உண்மைப் பொய்கள். ஒரு தினத்துக்காக வரையப்பட்ட உயிர்க் காட்சிகள்.”

“அவர்கள் எத்தனை நிஜமாக இருந்தார்கள்! நான் அவளைத் தொட்டேன், வாசனை பார்த்தேன், சிரித்தேன்... வருத்தப்பட்டேன், கவலைப்பட்டேன். இல்லை அவர்கள் நிஜம், நிஜம். எங்கே என் மனைவி? அவர்கள் நிஜம்!”

“நிஜம் இல்லை. நம் யுகத்தின் விஞ்ஞான சாகசம். வெற்றி. விஞ்ஞானம் எதுவும் தரும்.”

“இல்லை. அவர்களை என்னால் மறக்க முடியாது. மறக்கவே முடியாது!”

“மறந்துவிடுவாய். மறக்கப்போகிறாய். ஆத்மா, மெல்ல நட. (நடந்தான்) அறையின் மத்திக்குச் செல். (சென்றான்) மெதுவாகப் படுத்துக் கொள். தலையைச் சரி செய்துகொண்டு மேலே பார். கண்களை மூடு... ஆத்மா! உன் கடமைக்குத் திரும்பு. நீ சமுதாயத்தின் பகுதி. நீ நீ அவ்வளவுதான். மெதுவாக மெதுவாக அவர்களை மற... விளையாட்டு முடிந்துவிட்டது. இனி கடமை... கண்ணை மூடு. மற... அவர்களை மற...”

ஆத்மா நேராக விட்டத்தை நோக்கி அண்ணாந்து விறைப்பாகச் சயனத்தில் படுத்தான். மறதி அலைகளை மிகப் பிரயத்தனத்துடன் மீறி அவன் நாக்கு மேல் அண்ணத்தைத் தொட்டுவிட்டு மேல் பற்களின் நுனியைத் தொட்டுவிட்டு, மெதுவாக வாய் திறந்து ஒரே ஒரு வார்த்தை அமைத்தது:

நித்யா.

இப்பொழுது அவன் சலனமில்லாமல் ஆகிவிட்டான்.

எதிரே சுவரில் அந்த எண்கள் மாறிக்கொண்டிருந்தன. 27, 28, 29....

*1971*